செய்தி வெளியீடு எண்: 547 நாள் : 30.10.2015

**செய்தி வெளியீடு**

இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறையின் கீழ் இயங்கும் ஆயுஷ் மருத்துவ முறைகளான சித்தா, ஆயுர்வேதா, யுனானி, ஓமியோபதி மற்றும் யோகா மற்றும் இயற்கை மருத்துவ பட்டப்படிப்பு மாணவர் சேர்க்கைக்கான ஒற்றைச் சாளர கலந்தாய்வு 25–10–2015 முதல் 28–10–2015 வரை நடைபெற்றது. இக்கலந்தாய்வில் கலந்துகொண்டு கல்லூரியை தேர்வு செய்த மாணவர்களுக்கு உரிய கல்லூரியில் சேருவதற்கு கடைசி நாள் 30–10–2015 என தெரிவிக்கப்பட்டது. இந்நிலையில் இந்திய அரசின் ஆயுஷ் துறை இந்திய மருத்துவ முறை இளநிலை / முதுநிலை படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கைக்கான கடைசி நாள் 31–10–2015 இல் இருந்து 21–11–2015 ஆக மாற்றப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளது. எனவே மேற்படி கலந்தாய்வில் கலந்துகொண்டு உரிய கல்லூரியில் சேருவதற்கு கடைசி நாள் 06–11–2015 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இதன் விவரம் சம்பந்தப்பட்ட அனைத்து இந்திய முறை மருத்துவக் கல்லூரி முதல்வர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் 31–10–2015 அன்று நடைபெறுவதாக இருந்த காலியிடங்களுக்கான கலந்தாய்வு 17–11–2015 க்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது

முதன்மைச் செயலர் / ஆணையர்
இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதி துறை

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**